நல்லூர் இளா நூலகம்

Registered as a Newspaper    பக்கங்கள் 04    விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    ஆடி 20    [ 04-08-1993 ]    புதன்கிழமை    ஓசை 167

## 50 சதவீதமான மாணவருக்கு மொழியில் குறைந்த தேர்ச்சி

இலங்கையில் 50 சத வீதமான மாணவர்கள் மொழியிலும் 54 சத வீத மாணோர் கணிதத்திலும் குறைந்த தேர்ச்சிகளைப் பெறுவது ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வின்படி கிராமப்புறப் பிள்ளைகளில் 60 சத வீத மானவர்களும் நகர்ப்புறப் பிள்ளைகளில் 30 சத வீதமானவர்களும் போதனா மொழியில்தேர்ச்சி குறைந்தவர்கள், கணித பாடத்திலும்கிராமப்புறப்பிள்ளைகள்தேர்ச்சி குறைந்தவர்கள்; பெண்கள் பாடசாலைகளின் கல்வித் தேர்ச்சி கலவன் பாடசாலைகள், ஆண்கள் பாடசாலை என்பவற்றை விட அதிகம் என்றும் கண்டறியப்பட்டுள்ளது. கல்வித் துறையில் பெருமளவான மனித, நிதி பொருள் மூலவளங்கள் (4ஆம் பக்கம் பார்க்க)

[ ஆடிவேல் விழாவன்று அனர்த்தம் ]

# பம்பலப்பிட்டியில் குண்டு வெடிப்புக்கள்;

# கோயிலில் கூடிநின்ற ஆறு தமிழர் பலி!

## 35க்கும் அதிகமானோர் காயம்!

(கொழும்பு)

கொழும்பு பம்பலப்பிட்டி கதிரேசன் கோயிலில் ஆறு மணி நேர இடைவெளியில் இடம் பெற்ற இரண்டு குண்டுவெடிப்புச் சம்பவங்களினால் ஆறு தமிழர் கொல்லப்பட்டனர். மேலும் 35 பேர் காயமடைந்தனர். ஆடிவேல் விழாவிற்காக கூடியிருந்த மக்கள் மத்தியில் இக்குண்டுகள் வெடித்தமையினாலேயே இச்சேதங்கள் ஏற்பட்டன.

இரண்டு குண்டு வெடிப்பு சம்பவங்களில் முதல் குண்டு வெடிப்பு நேற்று முன்தினம் இரவு 11.40க்கும் மற்றைய குண்டு நேற்றுக்காலை 6.15க்கும் வெடித்தன. நேற்று முன்தினமிரவு நடைபெற்ற குண்டு வெடிப்புக்கு குண்டு ஒன்றை மறைத்து வைத்திருந்த நபர் ஒருவரால் நிகழ்ந்திருக்கலாம் என பொலிசார் தெரிவித்தனர். குண்டு எடுத்து வந்தவரும் பலியானார்.

நேற்றுக் காலை கதிரேசன் கோயிலில் வெடித்த மற்றைய குண்டினால் ஐந்துபேர் பலியானதாகவும் கோயில் வளவினுள் இருந்த பார்சல்ஒன்றை சிறுமி ஒருத்தி எடுத்து அதனை திறக்க முயன்றபோது அது வெடித்ததாகவும் தெரிவிக்கப் படுகிறது.

கொல்லப்பட்டவர்களில் மூன்று பெண்களும் 12 வயது சிறுவனும் அடங்குவர். 35 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் மூவர் பொலிசார் ஆவர்.

நேற்றுக்காலை நடைபெற்ற குண்டு வெடிப்பின்போது பெருந்தொகையான இந்துக்கள் ஆடிவேல்விழாவில் கலந்து கொண்டிருந்தனர் எனக் கூறப்படுகிறது.

குண்டு வெடிப்பு நடந்த போதிலும் வேல்ரதபவனி நேற்றுக்காலை திட்டமிட்டபடி நடந்தது எனினும் பக்தர்கள் அச்சம் காரணமாக அதிகம் கலந்துகொள்ளாமையினால் விழா சோபை இழந்து காணப்பட்டது.

## ஆலங்கேணியில் பதிந்தவர் வீடு திரும்பவில்லை

(யாழ்ப்பாணம்)

ஆலங்கேணியில் தமது பெயரை பதிவுசெய்து கொண்ட ஆனைக்கோட்டை வாசி ஒருவர் இன்னமும் தமது வீட்டிற்குவந்து சேரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 28, ஆம் திகதி இரவு ஆலங்கேணியில் தமது பெயரைபதிவுசெய்துகொண்ட சி. ரவீந்திரன் தமது இருப்பிடத்திற்குவந்துசேர வில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் பற்றிய விபரங்களை அறிய முடியாத நிலையில் உறவினர்கள் தவிக்கின்றனர். (தி)

## சடலத்தை இனங்காண மக்கள் முண்டியடிப்பு

(யாழ்ப்பாணம்)

கிளாலிக் கடலில் கடற்படையினரின் தாக்குதலின் போது பலியான பெண்ணின் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் இன்று புதைக்கப் படவுள்ளது.

இதற்கான உத்தரவை யாழ். அரசாங்க வைத்திய சாலைப் பணிப்பாளர் பிறப்பித்துள்ளார்.

28ஆம் திகதி இரவு கடற்படையினர் துப்பாக்கியால் சுட்டபோது இப் பெண் கொல்லப்பட்டார். கடந்த ஆறு தினங்களாக யாழ் வைத்தியசாலை பிரேத அறையுடன் இப் பெண்ணின் சடலம் அடையாளம்காண வைக்கப்பட்டது.

தற்போது பழுதடைந்து காணப்படும் இச் சடலத்தை நீண்ட நாட்களுக்கு வைத்திருக்கக் கூடிய வாய்ப்பற்ற நிலையில் இன்று புதைக்கப் படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக இச் சடலத்தை அடையாளங் காண்பதற்காக ஏராளமானோர் யாழ். வைத்திய சாலையை முற்றுகையிட்ட வண்ணம் இருந்தனர் ஆனால் எவராலும் இதை அடையாளம் காணமுடியாத நிலையை அடுத்து இச் சடலம் இன்று புதைக்கப்படும் என யாழ். வைத்தியசாலை வட்டாரங்கள்

## 3 பொலிசார் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புதூர் பொலிஸ் நிலையத்தில் கடந்த வியாழனன்று இடம்பெற்ற கிறனைட் வெடிப்பொன்றினால் மூன்று பொலிசார் காயமடைந்தனர்.

இவர்களில் ஒருவர் படுகாயம் அடைந்ததைத் தொடர்ந்து பொலநறுவ ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். இக் கிறனைட் தற்செயலாக வெடித்ததெனக் கூறப்படுகிறது.

## குண்டுவீச்சு விமானம் நோட்டம்

(தொல்புரம்)

சிறிலங்கா வான்படையினரின் குண்டுவீச்சு விமானம் ஒன்று நேற்று முற்பகல் 11.00 மணியளவில் வலிமேற்குப் பகுதிகளின் வான்பரப்பில் தாழப்பறந்து மக்கள்குடியிருப்புக்களை நோட்டம் இட்டுச் சென்றது

மேலும் இதேதினம்முற்பகல் 11.10மணியளவில் காரைநகர் காவல் நிலைகளிலுள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் பொன்னாலை, மூளாய் பகுதிகளிலுள்ள மக்கள் குடியிருப்

## மதவாச்சிப் பகுதி காடுகளில் புலிகள் ஊடுருவலாம்

புலிகள் தலைவர்கள் மூன்று பேர் கொண்ட புலிகள் குழு ஒன்று மதவாச்சி மற்றும் வில்பத்துப் பகுதியில் நுழைந்திருப்பதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றைத் தொடர்ந்து அப்பகுதிகளில் படையினர் உசார்படுத்தப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இப் பகுதிகளிலுள்ள இராணுவ நிலைகள் பலப்படுத்தப் பட்டிருப்பதோடு சிறிலங்கா பாதுகாப்புப் படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளார்கள். புலிகள் சில முக்கிய இலக்குகளைத் தாக்கக் கூடும் என்று பொலிஸ் தரப்பில் சந்தேகம் தெரிவிக்கப் படுகிறது.

மண்கிண்டிமலை தாக்குதலின்போது

## தப்பி ஓடிய இராணுவம்மீது நீதிமன்ற விசாரணை

(கொழும்பு)

மணலாறு மண்கிண்டிமலை

விடுதலைப்புலிகளின் தாக்குதலின்போது மண்கிண்டி

## அநுராவிற்கு ஆதரவாக

கடந்த 28, ஆம் திகதி இரவு ஆலங்கேணியில் தமது நிலையில் உறவினர்கள் தவிக்கின்றனர். (தி)

## சடலத்தை இனங்காண மக்கள் முண்டியடிப்பு

(யாழ்ப்பாணம்)

கிளாலிக் கடலில் கடற்படையினரின் தாக்குதலின் போது பலியான பெண்ணின் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் இன்று புதைக்கப்படவுள்ளது.

இதற்கான உத்தரவை யாழ். அரசாங்க வைத்திய சாலைப் பணிப்பாளர் பிறப்பித்துள்ளார்.

28ஆம் திகதி இரவு கடற்படையினர் துப்பாக்கியால் சுட்ட போது இப் பெண் கொல்லப்பட்டார். கடந்த ஆறு தினங்களாக யாழ் வைத்தியசாலை பிரேத அறையடல் இப் பெண்ணின் சடலம் அடையாளம்காண வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது பழுதடைந்து காணப்படும் இச் சடலத்தை நீண்ட நாட்களுக்கு வைத்திருக்கக் கூடிய வாய்ப்பற்ற நிலையில் இன்று புதைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக இச் சடலத்தை அடையாளங் காண்பதற்காக ஏராளமானோர் யாழ். வைத்திய சாலையை முற்றுகையிட்ட வண்ணம் இருந்தனர் ஆனால் எவராலும் இதை அடையாளம் காணமுடியாத நிலையை அடுத்து இச் சடலம் இன்று புதைக்கப்படும் என யாழ். வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (தி),(பா),(சி)

யம் அடைந்ததைத் தொடர்ந்து பொலநறுவ ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். இக் கிறனைட் தற்செயலாக வெடித்ததெனக் கூறப்படுகிறது.

## குண்டுவீச்சு விமானம் நோட்டம்

(தொல்புரம்)

சிறிலங்கா வான்படையினரின் குண்டுவீச்சு விமானம் ஒன்று நேற்று முற்பகல் 11.00 மணியளவில் வலிமேற்குப் பகுதிகளின் வான்பரப்பில் தாழப்பறந்து மக்கள்குடியிருப்புக்களை நோட்டம் இட்டுச் சென்றது

மேலும் இதேதினம்முற்பகல் 11.10மணியளவில் காரைநகர் காவல் நிலையிலுள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் பொன்னாலை, மூளாய் பகுதிகளிலுள்ள மக்கள் குடியிருப்

[ 4 ஆம் பக்கம் பார்க்க ]

இரண்டு குண்டு வெடிப்பு சம்பவங்களில் முதல் குண்டு வெடிப்பு நேற்று முன்தினம் இரவு 11.40க்கும் மற்றைய குண்டு நேற்றுக் காலை 6.15க்கும் வெடித்தன. நேற்று முன்தினமிரவு நடைபெற்ற குண்டு வெடிப்புக்கு குண்டு ஒன்றை மறைத்து வைத்திருந்த நபர் ஒருவரால் நிகழ்ந்திருக்கலாம் என பொலிசார் தெரிவித்தனர். குண்டு எடுத்து வந்தவரும் பலியானார்.

நேற்றுக் காலை கதிரேசன் கோயிலில் வெடித்த மற்றைய குண்டினால் ஐந்துபேர் பலியானதாகவும் கோயில் வளவினுள் இருந்த பார்சல்ஒன்றை சிறுமி ஒருத்தி எடுத்து அதனை திறக்க முயன்றபோது அது வெடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொல்லப்பட்டவர்களில் மூன்று பெண்களும் 12 வயது சிறுவனும் அடங்குவர். 35 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் மூவர் பொலிசார் ஆவர்.

நேற்றுக்காலை நடைபெற்ற குண்டு வெடிப்பின்போது பெருந்தொகையான இந்துக்கள் ஆடிவேல்விழாவில் கலந்து கொண்டிருந்தனர் எனக் கூறப்படுகிறது.

குண்டு வெடிப்பு நடந்த போதிலும் வேல்ரதபவனி நேற்றுக்காலை திட்டமிட்டபடி நடந்தது எனினும் பக்தர்கள் அச்சம் காரணமாக அதிகம் கலந்துகொள்ளாமையினால் விழா சோபை இழந்து காணப்பட்டது.

## மதவாச்சிப் பகுதி காடுகளில் புலிகள் ஊடுருவலாம்

புலிகள் தலைவர்கள் மூன்று பேர் கொண்ட புலிகள் குழு ஒன்று மதவாச்சி மற்றும் வில்பத்துப் பகுதியில் நுழைந்திருப்பதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றைத் தொடர்ந்து அப்பகுதிகளில் படையினர் உசார்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப் பகுதிகளிலுள்ள இராணுவ நிலைகள் பலப்படுத்தப்பட்டிருப்பதோடு சிறிலங்கா பாதுகாப்புப் படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளார்கள். புலிகள் சில முக்கிய இலக்குகளைத் தாக்கக் கூடும் என்று பொலிஸ் தரப்பில் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

## மண்கிண்டிமலை தாக்குதலின் போது தப்பி ஓடிய இராணுவம்மீது நீதிமன்ற விசாரணை

(கொழும்பு)

மணலாறு மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீதான தாக்குதலின்போது அங்கிருந்து தப்பி ஓடிய இராணுவத்தினரை இராணுவ நீதிமன்றமுன் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் தாக்குதலின்போது மண்கிண்டி மலை இராணுவ முகாமிலிருந்து எந்த ஒரு சிறு பொருள் கூட மிஞ்சவில்லை. ஒன்றில் அவை எடுத்துச்செல்லப்பட்டன அல்லது நாசம் செய்யப்பட்டன. எனவே இது தொடர்பாக இராணுவத்தினர் மீது விசாரணை நடாத்தப் படவேண்டும் என சிறிலங்கா

[ 4 ஆம் பக்கம் பார்க்க ]

## அநுராவிற்கு ஆதரவாக சாகும்வரைஉண்ணாவிரதம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டிருக்கும் கட்சியின் தேசிய அமைப்பாளர் அநுரா பண்டாரநாயக்காவின் இடைநிறுத்தம் ரத்துச் செய்யப்பட வேண்டும் எனக்கோரி சாகும் வரைஉண்ணாவிரதம் ஒன்றை ஆரம்பிக்கப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் உண்ணாவிரதத்தை சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் கொழும்பு ரோஸ் மிட் பிளேஸ் இல்லத்தின்முன் நடாத்தப்போவதாகவும், இவ் உண்ணாவிரதத்தில் ஆண்களும், பெண்களுமாக 25 பேரளவில் பங்குபற்றப்போவதாக அநுரா சார்பு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அநுரா மீதான இடை நிறுத்த உத்தரவு ரத்துச்செய்யப்படவேண்டும், கட்சியின் அங்கத்தவர் மத்தியில் ஐக்கி

[ 4 ஆம் பக்கம் பார்க்க ]

# கட்சி நடவடிக்கையை விட்டு யுத்தத்தில் ஈடுபடுக

## பௌத்த பிக்கு ஆலோசனை

(கொழும்பு)

இந்த நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் அனைத்தும் தமது நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்திவிட்டு யுத்தத்தில் முழுக் கவனத்தையும் செலுத்தவேண்டும் என்று மாத்தறை சித்தலகம சிறீ சீலாலங்கார தேரர் கூறியுள்ளார்.

தற்போது கோட்டை ஜெயவர்த்தனபுரம் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வரும் சீலாலங்கார தேரர் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது, கடசிப்பணம், கோவில்கள், பள்ளிவாசல்கள், பௌத்த ஆலயங்கள் என்பவற்றிடம் உள்ள பணம் யாவற்றையும் யுத்தத்திற்கு தேவையானவற்றைக் கொள்வனவு செய்யப்பயன்படுத்த வேண்டும்.

எல்லோரும் ஐக்கியப்பட்டு, புலி என்னும் எதிரியை ஒழித்துக் கட்டவேண்டும். அதன் பின்னர் இந்த நாட்டில் வாழும் அனைவரும் ஒன்றிணைந்து போட்டியிட்டு ஒரு தலைவரைத் தெரிவு செய்து கொள்ளவேண்டும்.

வடக்கு, கிழக்கு, வட-மத்திய மாகாணங்கள் இன்று முற்றாக யுத்தத்தால் அழிந்த வண்ணம் உள்ளன. இரவு பகலாக வெடிச்சத்தங்கள் ஒலிக்கின்றன. குண்டுகள் வெடிக்கின்றன. இறந்த சடலங்கள் ஆங்காங்கே குவிந்து கிடக்கின்றன. இலங்கையை மீட்பதற்கென்று உருவாகியுள்ள அமைப்புக்கள் ஏராளம். இவை பெயரளவில் தான் இயங்குகின்றன. யுத்த களத்திலிருந்து நாம் எப்படி மீள முடியும் என்பதை அனைவரும் இன்று சிந்திக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

## அரசியலமைப்பில் திருத்தம் தெரி. குழுவிற்கு அங்கீகாரம்

(கொழும்பு)

அரசியல் அமைப்பு திருத்துவது தொடர்பாக ஆராய பாராளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை நியமிப்பதற்கு பாராளுமன்றம் நேற்றுக் காலை அங்கீகாரம் அளித்துள்ளது.

இது சம்பந்தமாக அமைக்கப்படும் தெரிவுக்குழு அரசியலமைப்புக்கு சீர்திருத்தங்கள் அவசியமா இல்லையா என்பது குறித்து ஆராய இருப்பதுடன் ஏதாவது திருத்தங்கள் அல்லது மாற்றங்கள் தேவைப்பட்டால் பொருத்தமான சிபார்சுகளை முன் வைக்கும்.

பதினெட்டு அங்கத்தவர்களைக் கொண்டதாக அமைக்கப்படும் இத் தெரிவிக்குழுவின் அங்கத்தவர்களையும், தலைவரையும் சபாநாயகர் நியமனம் செய்வார்.

இந்தப் பிரேரணை சபை முதல்வரும், அமைச்சருமான விஜேபால மெண்டிசினால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

## வீரச்சாவு



2-ம் லெப். கவிவாணன் (ஜோன்)

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கும்புறுமூலை வெம்பு எனுமிடத்தில் விடுதலைப் புலிகள் நின்ற வீடு ஒன்றைசிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைத்து நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலி போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

[ 4 ஆம் பக்கம் பார்க்க ]

## மாகாணசபைக்கு எதிராக கொழும்பில் சுவரொட்டி

"மாகாண சபைகளை கலையுங்கள், ஜே. ஆர். - ராஜீவ் உடன்படிக்கையைக் கிழித்தெறியுங்கள், நாட்டுக்காக உயிர்நீத்த தீரர்களை நினைவு கூருங்கள்" இவ்வாறு கோரும் சுவரொட்டிகள் புறக்கோட்டை, கோட்டைப்பகுதிகளில் ஒட்டப்பட்டிருந்தன.

சிங்கள மொழியில் கைகளால் எழுதப்பட்ட இச் சுவரொட்டிகளில் வெவ்வேறு அமைப்புகளின் பெயர்கள் குறிக்கப்பட்டிருந்தன.

## தாண்டிக்குளத்தில் தருப்பு

(வவுனியா)

தடை செய்யப்பட்ட பொருள்களுடன் வந்ததாகக் கூறப்படும் நபர் ஒருவர் தாண்டிக்குளம் இராணுவ தடைமுகாமில் தடுத்துவைக்கப்பட்டு பின் நேற்று விடுவிக்கப்பட்டார்.

[ 4 ஆம் பக்கம் பார்க்க ]

## கைதிகள் விடுதலை விவகாரம்

# நடவடிக்கை எதற்கும் அரசு தயாராக இல்லை

[யாழ்ப்பாணம்]

தற்பொழுது ஏற்பட்டுள்ள யுத்தநிலை காரணமாக உண்ணாவிரதம் இருக்கும் கைதிகள் தொடர்பாக எந்த வித நடவடிக்கையும் எடுக்க அரசாங்கம் தயாராக இல்லை. இது தொடர்பாக பல அதிகாரிகளைச் சந்தித்தும் பயன் ஏற்படவில்லை. சகல இடங்களிலும் பிரச்சினைக்கான கதவு மூடப்பட்டுவிட்டது. இவ்வாறு பிரிகேடியர் ஆனந்த வீரசேகர யுத்தக் கைதிகளின் உறவினருக்கு அறிவித்துள்ளார்.

இவ்விபரம் நேற்று முன் தினம் திகதியிடப்பட்ட கடித

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## மட்டு. மோதலில் இரு புலிகள் வீரச்சாவு

கடந்த 29ஆம் திகதி அதிகாலை 5.30 மணியளவில் மட்டக்களப்பு பாலமடு என்ற இடத்தில் விடுதலைப் புலிகள் தங்கியிருந்த இடம் ஒன்றைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் இரு புலிகள் வீரச்சாவடைந்தனர்.

இம் மோதலில் வீரச்சாவடைந்த லெப்டினன்ட் வேங்கையன் (தர்மராஜா சந்திரகுமார்-வந்தாறுமூலை மட்டக்களப்பு) 2ஆம் லெப்டினன்ட் கவிதரன் / நல்லவன் (இளையதம்பி நல்லரத்தினம் - செங்கலடி மட்டக்களப்பு) ஆகிய இரு வேங்கைகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## உண்ணாவிரதம் தொடரும் யுத்தக்கைதிகள் உறுதி

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள போர்க்கைதிகள் நேற்றுக் காலை 11.00 மணிமுதல் நீர் அருந்துவதையும் நிறுத்தி தமது சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை தொடர்ந்து வருகின்றனர். தமது பிள்ளைகளின் உயிருக்கு என்ன நேருமோ என தெரியாதுள்ளதாகவும் அரசு, புலிகளுடன் பேச்சு நடத்தி இவர்களை விடுவிக்க முயற்சிக்க வேண்டுமெனவும் போர்க் கைதிகளின் பெற்றோர் கூறினர்.

தாம் தொடர்ந்து நீரருந்தாமல் உண்ணாவிரதத்தை தொடரவுள்ளதாக கைதிகள் கூறினர். தம்மை அரசு விடுவிக்காத பட்சத்தில் தாம் இறப்பதைத் தவிர வேறு வழியில்லை என்றும் அவர்கள் கூறினர்.

இதேவேளை உண்ணாவிரதிகள் அநேகர் படுத்த படுக்கை

[4ஆம் பக்கம் பார்க்க ]

## வரி விளம்பரம்

### தேவை

½" (அங்குலம்) இரும்புக் கம்பி மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளப்படும். துண்டுக் கம்பிகளாயின் 2½' (அடி) க்கு மேல்இருத்தல் வேண்டும். தொடர்புகட்கு: சக்திப் பகுதி, த. வொ. மே. கழகம், காங்கேசன் துறை வீதி, தாவடிச் சந்தி, தாவடி. (சி-7098)

### சலனம்

சென்னையிலிம்சொலைட்டி வெளியிடும் உலக சினிமா தரம் பற்றிய இருமாத சினிமா இதழ் கிடைக்குமிடம்: வசந்தம் புத்தக நிலையம், 405 அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (5592)

### தவறிவிட்டது

ரி.கே. எம் (பல்பொருள் வாணிபம் நடமாடும்) கோண்டாவில் வடக்கு அப்பர்வீதி. எனும் முகவரியுடைய விற்பனவுச் சிட்டை (1—100)புத்தகம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேலே உள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும் (5613)

### விபரங்கள் அனுப்ப பணிப்பு

தீவகத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களின் விபரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சு யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளரை கோரியுள்ளது.

1991இல் தீவகத்தில் இராணுவ நடவடிக்கை மேற்கொண்டபின்னர் யாழ்ப்பாணத்துக்கு இடம்பெயர்ந்து வராமல் தற்போதும் நெடுந்தீவு, புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு போன்ற இடங்களில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் ஆசிரியர்களின் கடைசியாகப் பெற்ற சம்பள விபரங்களை உடன் அனுப்பி வைக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (17)

ஜனாதிபதி செயலக

## இடம்பெயர் சேவையில் பத்திரிகையாளர் அவமதிப்பு

மட்டக்களப்பில் அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதி செயலக இடம்பெயர் சேவையின் போது பத்திரிகையாளர்கள் அவமதிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு அவமதிக்கப்பட்டதை தொடர்ந்து இந்துக் கல்லூரி மற்றும் ஆலய வளவுகளிலிருந்து அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளின் பேச்சுக்களைக் கேட்டு எழுதும் நிலை ஏற்பட்டது.

மேலும் இவ் இடம் பெயர் சேவை தொடர்பாக மும்மொழிகளிலும் வெளியிடப்பட்ட ''பாடும்மீன்'' மலர் பிரதிகள் பத்திரிகையாளர் கேட்டும் வழங்கப்படவில்லையாம்.

தென் இந்தியத்திருச்சபை-யாழ். பேராயம்


## முதியோர் இல்லம்

இணுவில் மக் லியோட் வைத்தியசாலையில் ஆரம்பிக்கப் படவுள்ள முதியோர் இல்லத்தில் சேருவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இருபாலாரும் சேர்த்துக் கொள்ளப்படுவர். 30-08-93க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். விண்ணப்பப் படிவத்திற்கும் மேலதிக விபரங்கட்கும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

செயலாளர்,
மக் லியோட் வைத்தியசாலை,
இணுவில்,
சுன்னாகம்.

(சி-7126)

## 6வது ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
06-09-1952


வீரச்சாவு:
04-08-1987

### தோழர் தேவா
(மங்களநாயகம்) முல்லைத்தீவு.

மனைவி — மேரி லெற்றீசியா
மகன் — மைக்கல் கொலின்ஸ்,
,, — எட்வின் அல்ட்றின்,
,, — மெரில் சில்வேஸ்ரர்,
,, — அல்வின் கொன்சலஸ்.

(5587)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகளில்...



### 2-ம் லெப்ரினன்ட் அசாவேரி
(கனகரத்தினம் ஜானகி)

பிறப்பு: 01-01-1973
வீரச்சாவு: 04-08-1991

அசாவேரி,
தன்மானத் தமிழினத்தின்
விடிவிற்காய் உயிர்நீத்த
விடிவெள்ளி
பள்ளிப்படிப்பை பாதியிலே துறந்து
மண்ணிற்காய் மரணத்தை தழுவியவள்
பெற்றவர்களை உற்றவர்களை மறந்து
மண்மீட்புக்காய் மாவீரர் ஆனவள்
மழை, வெயில் பாராது
கண் மூடாது
எல்லைப்புறங்களில் சென்றியில் நின்றவள்
போர்க்களங்களில் புதிய நானூறு படைத்தவள்
அனைத்து அடக்குமுறைகளையும் அறுத்தெறிந்து
மண்விடுதலையையும் பெண்விடுதலையையும்
வேண்டி நின்றவள்
வரிப்புலிச் சீருடையில் வீதிகளில் சென்றவள்
ஆனையிறவு சமரிலே உயிர் தந்தவள்
அவளுக்கு எம் இதய அஞ்சலிகள்.

கோழியாகுளம்,
ஓமந்தை,
வவுனியா.

— குடும்பத்தினர்.

(5311)

மாணவர் உணவு முத்திரைக்கு

## புரட்டாதி 5 வரை பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

தை. மாசி, பங்குனி மாதங்களுக்கான மாணவ மதிய உணவு முத்திரைகளுக்கான பொருள்களை விநியோகிக்கும் காலத்தை புரட்டாதி மாதம் 5ஆம் திகதி வரைநீடிப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட சமூகசேவைகள் பிரதிப் பணிப்பாளரின் அறிவித்தலொன்று தெரிவிக்கிறது.

அவ் அறிவித்தலில் மேலும்; சில ப. நோ. கூ. சங்கங்கள் இதுவரை இம்முத்திரைக்கான பொருள்களை விநியோகித்து முடிக்கவில்லை எனவும் ப. நோ. கூ. சங்கங்களுக்கு இம் முத்திரைகளுக்கு உரிய பொருள்களைவிநியோகிக்க போதிய பொருள்களை கொள்வனவு செய்ய முடியாமைக்கு நிதி நெருக்கடியும், பொருள்கள் இல்லாமையுமே காரணம் என தெரிவிக்கப்பட்டதால் இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனவும்,

இம் முத்திரைகளுக்கு ப.நோ.கூ. சங்கங்கள் புரட்டாதி 5 ஆம் திகதிவரை பொருள்களை விநியோகம் செய்யும்படியும் குறிப்பிடப்பட்டுள்ளது

### ஆதாரம் காட்டிப் பெறவும்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் மாலை யாழ். போதனா மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் கைக்கடிகாரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அடையாளம் காட்டி பெற்றுக்கொள்ளவும். (சி)

## நினைவு கூருகின்றோம்...

### 1993-08-04

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த -
**அமுதன்** (அரியமுத்து அமுதலிங்கம் - ஈவினை, புன்னாலைக்கட்டுவன் - யாழ்)

1987ஆம் ஆண்டு மன்னார் - பூநகரி 4-ம் கட்டை இராணுவ முகாமில வைத்து இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பெயரால் அறிவிக்கப்பட்ட யுத்தநிறுத்தத்திற்கு மாறாகச் சிறிலங்கா இராணுவத்தால் கொலை செய்யப்பட்ட -

பிரதேச படைத்துறைத் தளபதி
★ **தேவா** ( — மங்களநாயகம் - முல்லைத்தீவு)
★ **குகன்** ( — செந்தில்குகன் - கைதடி - யாழ்)

திருமலை - சாம்பல்தீவுப் பகுதியினைச் சுற்றி வளைத்த கறுப்புச்சட்டைக்காரர்களால் படுகொலை செய்யப்பட்ட குழந்தை உட்பட 4 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு பரந்தனில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு மட்டு - கித்துள் சந்திப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -
**லெப் தம்பிராசா** (த. கிருஷ்ணகுமார் - ஏரடியனாறு - மட்டு)

இதேஇடத்தில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -
**சுரேன் ஜிம்போ** (கந்தவேள் குருநாதன் - இருதயபுரம் - மேற்கு - மட்டு)

முல்லைத்தீவு - கள்ளிக்காட்டுப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -
**சுரேஸ்** (ந. சிவராசா - திருமலை)

கரவெட்டி - துன்னாலையில் இந்தியப் படையினருடனான சமரின்போது விழுப்புண் அடைந்து மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -
**சங்கர்** (குணம் குணபாலன் - இராஜகிராமம், கரவெட்டி - யாழ்)


யாழ்ப்பாணத்தில் இந்தியப் படையினரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர்.

யாழ் - கரவெட்டிப் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1990ஆம் ஆண்டு வவுனியா - மாமடு முகாமிலிருந்து

உடனடியாக அனுப்பி வைக்குமாறு வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சு யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளரை கோரியுள்ளது.

1991இல் தீவகத்தில் இராணுவ நடவடிக்கை மேற்கொண்டபின்னர் யாழ்ப்பாணத்துக்கு இடம்பெயர்ந்து வராமல் தற்போதும் நெடுந்தீவு, புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு போன்ற இடங்களில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் ஆசிரியர்களின் கடைசியாகப் பெற்ற சம்பள விபரங்களை உடன் அனுப்பி வைக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (17)



# தோழர் தேவா

(மங்களநாயகம்) முல்லைத்தீவு.

மனைவி — மேரி லெற்றீசியா
மகன் — மைக்கல் கொலின்ஸ்,
,, — எட்வின் அல்ட்றின்,
,, — மெரில் சில்வேஸ்ரர்,
,, — அல்வின் கொன்சலஸ்.

(5587)

# கேள்வி அறிவித்தல்

## பிரதேச கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்.

### வடக்கு – கிழக்கு மாகாணசபை நிதி ஒதுக்குகளின் கீழ் யாழ். மாவட்டப் பாடசாலைகளில் திருத்த வேலைகள் (உலகவங்கி ஐ. டீ. ஏ.)

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ் பிரதேசக் கல்வித் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1993ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18-ம் திகதி (18 08 93) முற்பகல் 10 00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் அதன் எதிரே காட்டப்பட்டுள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடிய தொகைக்கு ஒப்பந்த வேலை செய்வதற்கு என நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களுக்கு 1993ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ஆம் திகதி (13 08-1993) பி ப. 2.00 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விப் பணமாக ரூபா 50/- (ஐம்பது)ம், மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூ 250/- (இருநூற்றுஐம்பது)ம் செலுத்தியதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் யாழ் கல்வித்திணைக்களத்தில வழங்கப்படும் கேள்விப் பத்திரப் பணம், கேள்வி வைப்புப் பணம் ஆகியன வங்கிக் கட்டளையாகச் செலுத்தப்படல் வேண்டும். கேள்விகள் 1993ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18ஆம் திகதி (18-08-93) மு. ப 10 30 மணிக்கு யாழ். கல்வித்திணைக்களத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

கேள்விப் பத்திரங்களுடன் இணைத்து வழங்கப்படும் ஒவ்வொரு வேலைக்குமான கால அட்டவணைப்படியும், ஒப்பந்தப் பிரமாணங்களின்படியும் தவறாது வேலையைப் பூர்த்தி செய்து தரக்கூடியவர்கள் மட்டும் இவ்வேலைகட்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விபரங்களை யாழ். பிரதேசக் கல்வித் திணைக்களக் கட்டிட வேலைப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

| பாடசாலையின் பெயர் | வேலை விவரணம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை ரூபா |
|---|---|---|
| 1. யா/கோண்டாவில் பரம்சோதி வித். | பாடசாலைக் கட்டிட பெருந் திருத்த வேலைகள். | 500,000/- |
| 2. யா/பிலவத்தை அ. மி. த. க. பா. | பாடசாலைக் கட்டிட அத்தியாவசிய திருத்த வேலைகள் | 250,000/- |
| 3. யா/சங்கானை ஸ்தான அ. மி. த. க பா. | பாடசாலைக் கட்டிட அத்தியாவசிய திருத்த வேலைகள் | 250,000/- |
| 4. யா/அம்பன் அ. மி. த. பா. | பாடசாலைக் கட்டிட அவசியத் திருத்த வேலைகள் | 250 000/- |
| 5. யா/குடத்தனை ,, | ,, | 250,000/- |
| 6. யா/வரணி சைவப்பிர. வி. | பாடசாலை கட்டிட திருத்த வேலைகள் | 250 000/- |
| 7. யா/இணுவில் சைவப்பிர. வித். | ,, | 500,000/- |
| 8. யா/உயரப்புலம் மெ. மி. த. க. பா. | பாடசாலைக் கட்டிட பெருந் திருத்த வேலைகள் | 500,000/- |

பிரதேச கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
1993-08 03

இ. சுந்தரலிங்கம்
பிரதேசக் கல்விப் பணிப்பாளர்
[சி-7123]

விடிவெள்ளி
பள்ளிப்படிப்பை பாதியிலே துறந்து
மண்ணிற்காய் மரணத்தை தழுவியவள்
பெற்றவர்களை உற்றவர்களை மறந்து
மண்மீட்புக்காய் மாவீரர் ஆனவள்
மழை, வெயில் பாராது
கண் மூடாது
எல்லைப்புறங்களில் சென்றியில் நின்றவள்
போர்க்களங்களில் புதிய நானூறு படைத்தவள்
அனைத்து அடக்குமுறைகளையும் அறுத்தெறிந்து
மண்விடுதலையையும் பெண்விடுதலையையும்
வேண்டி நின்றவள்
வரிப்புலிச் சீருடையில் வீதிகளில் சென்றவள்
ஆனையிறவு சமரிலே உயிர் தந்தவள்
அவளுக்கு எம் இதய அஞ்சலிகள்.


கோழியாகுளம், — குடும்பத்தினர்.
ஓமந்தை,
வவுனியா.

(5311)

# ஓராண்டை நினைத்து

## எரிகின்றோம் சிதைநெருப்பில்





வேலணையை பிறப்பிடமாகக் கொண்ட

செல்வன் பத்திநாதன் கவாஸ்க்கர் — செல்வி இராஜரட்ணம் கவிதா

13.07.1988 < மலர்வு: > 14.07.1976

திருவுருவங்களின் பிரிவு: 14. 08. 1992

திதி: 04. 08. 1993

நாட்கள் பல நகர்ந்து ஆண்டுகள் பல வந்தும் போய்விடலாம் எம் உதிரத்தில் கலந்த உள்ளத்தில் மலர்ந்த-எம் அன்புச் செல்வங்களின் நினைவுகள் மறைந்திடுமா? பாசங்கள் மாறிடுமா? நேசங்கள் குறைந்திடுமா? உங்கள் மெய் நடைகளும் பொன்மொழிகளும் என்றென்றும் எம் மனதில் நீங்காது நிலைத்திருக்கும்.

உங்கள் நினைவுடன் இணைந்திருக்கும்
குடும்பத்தினர்

சாவகச்சேரி தெற்கு,
மீசாலை.

(5602)

இந்தியப் படையினருடனான சமரின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**லெப் தம்பிராசா** (த. கிருஷ்ணகுமார் - ஏரடியனாறு - மட்டு)

இதேஇடத்தில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**சுரேன் ஜிம்போ** (கந்தவேள் குருநாதன் - இருதயபுரம் - மேற்கு - மட்டு)

முல்லைத்தீவு - கள்ளிக்காட்டுப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**சுரேஸ்** (ந. சிவராசா - திருமலை)

கரவெட்டி - துன்னாலையில் இந்தியப் படையினருடனான சமரின்போது விழுப்புண் அடைந்து மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**சங்கர்** (குணம் குணபாலன் - இராஜகிராமம், கரவெட்டி - யாழ்)

யாழ்ப்பாணத்தில் இந்தியப் படையினரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர்.

யாழ் - கரவெட்டிப் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1990ஆம் ஆண்டு வவுனியா - மாமடு முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடன் விளாத்திக்குளம் பகுதியில் ஏற்பட்ட நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**ஜெசி** ( — — வவுனியா)

**விபுலானந்தன்** (இராமசாமி இராசகுமார் - வவுனியா)

**றோகான்/குகன்** (வீரகத்திப்பிள்ளை குகதாசன் - கேணிக்குளம் ஒழுங்கை இருபாலை கிழக்கு கோப்பாய் யாழ் )

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட ஆறுமுகத்தான் குடியிருப்பைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன். எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட இளமபெண், ஆசிரியர் உட்பட வந்தாறுமூலையைச் சேர்ந்த 2 தமிழர்கள்.

திருமலை-உப்பாற்றுப் பகுதியில் சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்.

யாழ் மத்தியூஸ் வீதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்.

1991ஆம் ஆண்டு ஆனையிறவில் மேற்கொள்ளப்பட்ட ஆ. க. வெ. நடவடிக்கையின்போது புல்லாவெளியிலிருந்து ஆனையிறவை நோக்கி முன்னேறிய சிறிலங்காப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**உதயன்** (முருகேசு குமாரசாமி-64, மண்டூர் 03 மட்டு)

**கப்டன் தும்பன்** ( சின்னத்தம்பி சூரியமூர்த்தி - சிவன் கோயில்வீதி, மட்டுவில் தெற்கு சாவகச்சேரி)

**கேதீஸ்** ( சுப்பிரமணியம் விஜயதாசன் - பொன்னாலை தெற்கு - சுழிபுரம் - யாழ்)

**நிசாந்தன்** (இளையதம்பி பிறேமசிறி-39, நாயன்மார்வீதி, நல்லூர்-யாழ்)

**தர்மிலா** (கௌரி கனகு-செல்வபுரம், உரும்பராய் தெற்கு- யாழ்)

1992ஆம்ஆண்டு வவுனியா - இறம்பைமடுவில் சிறிலங்கா இராணுவத்தினர் மீதான அதிரடித் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**லெப். முத்துக்குமரன்/எமில்டன்** (சோமசேகரம் நிமலநாதன் குறிசுட்டகுளம். கனகராயன்குளம்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்கள்

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-7122)

யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

உழுகிற காலத்தில் ஊர்சுற்றிவிட்டு,
அறுக்கிற காலத்தில் அரிவாள் எடுத்து
என்ன பயன்? —தமிழ் பழமொழி


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 04-08-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண்-05


## அரசை நிர்ப்பந்திப்பதே நியாயமானதாகும்

**போ**ர்க் கைதிகளின் விடுதலை தொடர்பான விடயத்தில், சிங்கள அரசாங்கம் நீண்ட மௌனம் சாதிக்கின்றது. கைதிகளுக்கும் தமக்கும் எதுவித சம்பந்தமும் இல்லைப்போல் நடந்து கொள்கின்றது. இந்நிலையில் கைதிகளின் பெற்றோர்கள் / உறவினர்கள் தலைவர் பிரபாகரனிடம் கைதிகளை விடுவிக்கக் கோரியும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கைதிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

கைதிகளை விடுவிப்பதற்கு விடுதலைப் புலிகள் ஏற்கனவே சம்மதித்துள்ளனர். இதற்காக கடந்த முறை இடம் பெற்ற உண்ணாவிரதத்தின் போது, அரசாங்கத்துடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது, தமது நிலைப்பாட்டைத் தளர்த்தி உடன்பாடும் செய்து கொண்டனர். இதனை பி பி, ஸி.க்கு வழங்கிய பேட்டி ஒன்றில் காவலிலுள்ள பொலிஸ் கான்ஸ்டபிள் அமரசிங்காவின் தந்தையான டயஸ் சில்வாவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை கைதிகள் தொடர்பாக அரசாங்கம் ஏற்றுக்கொண்ட உடன்பாட்டை நிறைவேற்றுமாறு புலிகள் கோருவது நியாயமானது. ஏனெனில், கைதிகள் போர் நடவடிக்கைகளின் போதே கைதுசெய்யப்பட்டவர்கள். இவர்கள் அப்பாவிகளல்ல. அரசிற்கு ஆதரவாக, தமிழ் மக்களுக்கு எதிராகப் போரிட்டவர்கள். எனவேதான் இவர்கள் யாருக்காகப் போரிட்டார்களோ அவர்கள் நிபந்தனைகளை நிறைவேற்றுவது என்பது அவசியமாகின்றது.

ஆகையினால், போர்க்கைதிகளை நிபந்தனைகளின்றி விடுவிக்குமாறு கோருவது நியாயபூர்வமானதாகத் தெரியவில்லை. இவர்கள் தமது பிள்ளைகள் / உறவினர்கள் எந்த அரசிற்காக போரிட்டார்களோ அவர்களிடம் தமது பிள்ளைகளை / உறவினர்களை விடுவித்துத் தருமாறு கோருவதே நியாயமானதாகும்.

ஆனால், அரசாங்கத்திடம் தாம் கோரிக்கை பலமுறை விடுத்ததாகவும் அரசாங்கம் செவி சாய்ப்பதாக இல்லை எனவும் கைதிகளின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர். அதற்குத் தாம் ஏழைகள், கிராமப்புறங்களைச் சார்ந்தவர்கள், அரசியற்பலம்

### கொழும்பில் தமிழர்களிடம்

# வழிப்பறிகள் அதிகரிப்பு புகார் செய்தும் பயனில்லை

(கொழும்பு)

கொழும்பில் சி.ஐ.டிகளாக நடித்து அப்பாவித் தமிழர்களிடம் தமது கைவரிசையைக் காட்டிவரும் வழிப்பறிக்கொள்ளையர்களின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

இதனை அடுத்து கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வசிக்கும் தமிழர்கள் தம்மிடம் இருப்பதெல்லாவற்றையும் பறிகொடுத்துவிட்டு விழிபிதுங்க வேண்டிய பரிதாப நிலைக்கு உள்ளாகியுள்ளனர். இதற்குமுடிவுகட்ட யாரும் முன்வருவதில்லை

இத்தகைய வழிப்பறிச் சம்பவங்கள் குறித்து பல மட்டங்களில் புகார் செய்தும் எதுவித பிரயோசனமும் கிடைப்பதாக இல்லை. பத்திரிகைக் காரியாலயங்களுக்கு வந்து அழுது வடித்துவிட்டு செல்வதில்தான் இந்த அப்பாவிகள் திருப்தியடையவேண்டி இருக்கின்றது.

கொழும்பில் கடமைபுரியும் தமிழ் நபர் ஒருவர் சம்பள பணத்துடன் தனது குடும்பத்தினரை பார்க்கச் சென்ற சமயம் இவ்வாறான போலிச் சி. ஐ டி. ஒருவரிடம் தமது சம்பள பணத்தை பறிகொடுத்தார்.

இச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது; கடந்த திங்கட்கிழமை றத்தோட்டை செல்வதற்காக கொழும்பு புறக்கோட்டை பஸ்நிலையத்தில் காத்திருந்த சமயம் நாலு இளைஞர்கள் இவரிடம் வந்து தம்மை சி. ஐ. டி. என அறிமுகப்படுத்திக் கொண்டு சோதனை செய்ய வேண்டுமெனக் கூறினராம். பின் இவரிடம் அவர்கள் அடையாள அட்டையைக் கோரினர். அடையாள அட்டை தொலைந்துவிட்டதாக அந்த நபர் கூறியதும் இதை ஏற்றுக்கொள்ளமுடியாதுவா பொலிசிற்கு போவோம் எனக் கூறி அவர்கள் இவரை 235 ஆம் இலக்க பஸ்சில் ஏற்றிச் சென்றனராம். பின்னர் விக்ரோறியா பாலத்திற்கு அண்மையாக உள்ளபஸ்நிலையத்தில் இவரை இறக்கிய அந் நபர்கள் சோதனைசெய்து கழுத்திலிருந்த தங்கச் சங்கிலி மோதிரம் மற்றும் சம்பளப்பணம் சகலவற்றையும் பறித்துக் கொண்டனராம். மகளுக்கென இந்நபர்வாங்கிய பட்டு புடைவையையும் அவர்கள் விடவில்லை. பின்னர் அவர்கள் ஆட்டோ ஒன்றில் ஏறிச் சென்றுவிட்டனர்.

பஸ்சிற்கு கொடுப்பதற்குக் கூட பணமில்லாது புறக்கோட்டைக்கு வந்த இந்நபர் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யச் சென்றபோது சம்பந்தப்பட்ட இளைஞர்களை பிடித்துவந்தால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முடியும் என அவரிடம் கூறப்பட்டதாம். பொலிசாரே இவ்வாறு கூறினால் வேறு யாரிடம் போய் முறையிடுவது என அந்நபர் வீடுநோக்கி சென்றார்.

## தபால்களை உடைத்து காசோலை திருட்டு

(கொழும்பு)

தபால்களை உடைத்து திருடிய தபால்நிலைய ஊழியர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் தபால் நிலையத்தைச் சேர்ந்த ஊழியர் ஒருவர் கடிதங்களை உடைத்து அவற்றில் வரும் காசுக்கட்டளை மற்றும் காசோலைகளை திருடி போலிக் கையெழுத்திட்டு மாற்றியதாகக் கூறப்பட்ட புகாரைத் தொடர்ந்து அநுராதபுரம் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# சுவிஸ் அகதிகளை உடன் திருப்பி அனுப்ப வேண்டாம்

## தூதுவரிடம் கோரிக்கை

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட்டு சுமுகமான சூழ்நிலை எட்டப்படும் வரை சுவிட்சர்லாந்திலுள்ள இலங்கை அகதிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என்று கொழும்பிலுள்ள சுவிட்சர்லாந்து தூதுவரிடம் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

அண்மையில் கொழும்பிலுள்ள சுவிட்சர்லாந்து தூதுவரை சந்தித்த தமிழ்த் தரப்பு தூதுகோஷ்டி ஒன்று இது பற்றி அவருக்கு மேலும் கூறுகையில், வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்ள பாதுகாப்பு நிலைவரம் காரணமாகவே தமிழர்கள் வெளிநாடுகளுக்கு அகதிகளாகச் சென்றிருக்கிறார்கள். இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு நாட்டில் அமைதி நிலை திரும்பினால் மாத்திரமே அகதிகள் தமது சொந்த இடங்களுக்கு திரும்ப முடியும். அதுவரை அகதிகளைத்திருப்பி அனுப்ப முயற்சிக்கக் கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளது.

1992 செப்டம்பருக்குப் பின்னர், சுவிஸ் சென்றடைந்த இலங்கை அகதிகளை திருப்பி அனுப்ப அந்நாட்டு அரசு நடவடிக்கை எடுத்து வருவதும், இது தொடர்பாக ஆராய சுவிஸ் அரசின் அதிகாரி ஒருவர் விரைவில் கொழும்பு வர விருப்பதும் தெரிந்ததே.

## மொழிபெயர்ப்பு தவறினால் சிறையிருந்தவர் விடுதலை

(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்த வல்லிபுரம் குமார குலசிங்கம் நீதி மன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

...களுக்கு வழங்கிவந்தார் என்று இவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது

திருமதி திலகவர்த்தனா முன்நிலையில் அண்மையில் இவ் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது பொலிஸ்

### ஐக்கிய தேசிய கட்சியில்

## றொனியை இணைப்பதற்கு பலத்த ஆட்சேபம்

முன்னாள் நிதி அமைச்சர் றொனித மெல்லை மீண்டும் ஐ. தே. க வுடன் இணைப்பதற்கு அமைச்சரவை கடுமையாக எதிர்ப்பை தெரிவித்ததை தொடர்ந்து றொனியை மீண்டும்இணைப்பதற்கான நடவடிக்கை பிசுபிசுத்து போனதாக 'யுத்திய' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவை போல றொனியும் ஓர் சர்வாதிகாரி ... எடுப்பது கட்சியில் இன்னும் பிளவு வரும் என அமைச்சர்கள் சுட்டிகாட்டியதாக தெரிய வருகின்றது.

### ஆதாரம காட்டிப் பெறவும்

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்திற்கு வருகை தந்த ஒருவர் தொலைத்த சொற்ப பணத்தைக் கண்டெடுத்த வேம்படி மகளிர் கல்லூரி ...

### அழிந்து போன தனிப்பட்ட விபரக்கோவை

## புதியதாகத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்

-ஓய்வூதிய பணிப்பாளர்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளில் அரசாங்க சேவை/ உள்ளூராட்சி சேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோவைகள் இராணுவ நடவடிக்கை காரணமாக அழிந்திருப்பின் ஓய்வூதியம் பெறுவதற்கு கீழ்க்காணப்படும் ஆவணங்களை சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர்கள்/பிரதேச செயலாளர்களிடம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஓய்வூதியப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்:

- பொது 55 விண்ணப்பம்.
- உத்தியோகத்தர் சேவையாற்றினார் என்பதை நிச்சயப்படுத்துவதற்குதேவையான வரலாற்றுத் தாளுக்குப் பதிலாக அ. சுற்றுநிருபம் 121இல் 5:4 இன்படி சிபார்சு அறிக்கை.
- ஓய்வூதியம் பணிக்கொடை பெறுவதற்கு ஓய்வூதியரின் விருப்பம் அல்லது விருப்பமின்மை வெளிப்படுத்தும் கடிதம்.
- பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அல்லது சத்தியக் கடதாசி.
- ஓய்வூதியரின் மாதிரிக் கையொப்பமும் தனிப்பட்ட விலாசம் குறிக்கப்பட்ட கடிதமும்.
- ஓய்வூதியருக்கு அடையாள அட்டை வழங்குவதற்கான புகைப்படப் பிரதி 3 (ஒரு புகைப்படத்தில்பின் பகுதியில் ஓய்வூதியரின் கையெழுத்திட்டு திணைக்களத் தலைவர் மூலம் அத்தாட்சிப் படுத்தி அனுப்ப வேண்டும்.)
- திறைசேரி 148 மாதிரிப் பத்திரத்தின் பிரதி இரண்டும் திறைசேரி 147 மாதிரிப் பத்திரத்தின் பிரதி ஒன்றும் புகைப்படத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.

## அடையாள அட்டை கேட்பது இனவாத அடிப்படையிலேயே

(கொழும்பு) வி. எஸ். ராஜா

தேர்தலில் வாக்களிக்கச் செல்வோர் அடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டுமெனக் கோருவதை கூர்ந்து கவனித்தால் இதன் பின்னணியில் இனவாத அடிப்படை இருப்பதை அவதானிக்கலாம். இவ்வாறு விவசாய கிராமிய தொழிலாளர் காங்கிரசின் பொதுச் செயலாளர் வி. எஸ். ராஜா தெரிவித்தார்.

தெகியோவிட்ட அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய அவர் மேலும் கூறுகையில், அண்மையில் நடந்து முடிந்த மாகாண சபை தேர்தலில் நுவரெலியா தொகுதியில் அதிக பெரும்பான்மையுடன் அனைவரும் வியக்கத்தக்க முறையில் தமிழ் பிரதிநிதிகள் வெற்றி பெற்றனர். ஆளும்ஐக்கிய தேசியக்கட்சிக்கும் வகுப்புவாத எதிர்க்கட்சிகளுக்கும் இந்த வெற்றி தொடர்பாக ஏற்பட்ட எரிச்சலின் வெளிப்பாடே இந்த அடையாள அட்டை நாடகம் வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண தயக்கம் காட்டும் அரசும், எதிர்க்கட்சிகளும் அடையாள அட்டை விடயத்தில் ஒற்றுமையாக உள்ளனர். மலையக தோட்டத் தொழிலாளர் அரசியலில் பிரவேசித்து தாங்கள் விரும்பியவர்களை தேர்ந்தெடுக்கப்படுவதை தடை செய்யவே இந்த கபட நாடகம் அரங்கேற்றப்படுகிறது எனவும் தெரிவித்தார்.

### உள்ளூர் உற்பத்திகளின்

பட்டவர்கள். இவர்கள் அப்பாவிகளல்ல. அரசிற்கு ஆதரவாக, தமிழ் மக்களுக்கு எதிராகப் போரிட்டவர்கள். எனவேதான் இவர்கள் யாருக்காகப் போரிட்டார்களோ அவர்கள் நிபந்தனைகளை நிறைவேற்றுவது என்பது அவசியமாகின்றது.

ஆகையினால், போர்க்கைதிகளை நிபந்தனைகளின்றி விடுவிக்குமாறு கோருவது நியாயபூர்வமானதாகத் தெரியவில்லை. இவர்கள் தமது பிள்ளைகள் / உறவினர்கள் எந்த அரசிற்காக போரிட்டார்களோ அவர்களிடம் தமது பிள்ளைகளை / உறவினர்களை விடுவித்துத் தருமாறு கோருவதே நியாயமானதாகும்.

ஆனால், அரசாங்கத்திடம் தாம் கோரிக்கை பலமுறை விடுத்ததாகவும் அரசாங்கம் செவி சாய்ப்பதாக இல்லை எனவும் கைதிகளின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர். அதற்குத் தாம் ஏழைகள், கிராமப்புறங்களைச் சார்ந்தவர்கள், அரசியற்பலம் அற்றவர்கள் எனவும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர். பெற்றோர்கள் / உறவினர்கள் கூறுவது போன்று, அவர்கள் அரசியற்பலமற்ற ஏழைகள் என்பது தற்பொழுது ஏற்றுக்கொள்ளக் கூடியதுதான். சிங்களப் பேரினவாதம், இவ்வாறானவர்களைக் கொண்டே தமிழருக்கு எதிராகப் போரிடுகிறது என்பதும் முன்னரே வெளிவந்த உண்மைதான்.

ஆனால், பெற்றோர்கள் தாம் அரசியற்பலம் அற்றவர்கள் என்பதை தமது ஏழ்மையைக் கொண்டே குறிப்பிடுகின்றனர். அவர்கள் தம்மை ஒரு சக்தியாக கருதாத தன் விளைவே இதுவாகும். இவர்கள் தற்பொழுதுதனி மனிதர்களும் அல்ல. 33 கைதிகளின் பெற்றோர்கள் எனப்பார்த்தாலும், சிலநூற்றுக்கணக்கான நெருங்கிய உறவினர்களைச் சேர்க்க முடியும், இந்நிலையில் அரசிற்கு எதிரான போராட்டத்தை தனித்து அவர்களால் ஆரம்பிக்க முடியும்.

எடுத்துக் காட்டாக, போர்க்கைதிகள் இங்கு சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பதற்குப் பதிலாக உறவினர்களில் சிலர் தென்னிலங்கையில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தையோ அன்றி, சுழற்சி முறையான உண்ணாவிரதத்தையோ தொடங்கினால், ஆரம்பத்தில் அரசியற் கட்சிகளோ, அரசாங்கமோ பாராமுகமாக இருப்பினும், சில நாட்களில் அது அரசியல் விவகாரமாவது தவிர்க்க முடியாதது.

ஏனெனில், எதிலும் அரசியல் ஆதாயம் தேடமுற்படும் அரசியற் கட்சிகள் இதனை ஏதோ ஒரு வகையில் பயன்படுத்துவதில் பின்நிற்கப் போவதில்லை. அத்தோடு, சிங்கள மக்களும், குறிப்பாக தற்பொழுது வடக்கு-கிழக்கில் போரிடும் இராணுவத்தினரும், பொலிசாரும் மற்றும் அவர்களின் உறவினர்களும் இதுபற்றி சிந்திக்க வேண்டிய நிலையிலேயே உள்ளனர். இதனை அவர்கள் தட்டிக் கழிக்க முடியாது. ஏனெனில், எதிர்காலத்தில் தமக்கும் இந்நிலை ஏற்படும் என்பதை அவர்கள் புறக்கணித்துவிடமுடியாது. இவ்வாறு உருவாகும் குழப்ப நிலையால் இவ் விடயத்தில் அரசு கவனம் செலுத்தாமல் இருக்க முடியாது. ஆகையினால் கைதிகளின் விடுதலைக்கு பெற்றோர்கள் உடன் செய்யவேண்டியது தென்னிலங்கையில் உறுதியுடன் போராட்டத்தை ஆரம்பிப்பதே. இதுவே நன்மை அளிக்கும் சிறந்த வழிமுறையாகும்.

மெனக் கூறினராம். பின் இவரிடம் அவர்கள் அடையாள அட்டையைக் கோரினர். அடையாள அட்டை தொலைந்து விட்டதாக அந்த நபர் கூறியதும் இதை ஏற்றுக் கொள்ளமுடியாது வா பொலிசிற்கு போவோம் எனக் கூறி அவர்கள் இவரை 235 ஆம் இலக்க பஸ்சில் ஏற்றிச் சென்றனராம். பின்னர் விக்ரோறியா

களை மேற்கொள்ள வேண்டாம் என்று கொழும்பிலுள்ள சுவிட்சர்லாந்து தூதுவரிடம் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

அண்மையில் கொழும்பிலுள்ள சுவிட்சர்லாந்து தூதுவரை சந்தித்த தமிழ்த் தரப்பு தூதுகோஷ்டி ஒன்று இது பற்றி அவருக்கு மேலும் கூறுகையில், வடக்கு கிழக்கு பகுதி

## மொழிபெயர்ப்பு தவறினால் சிறையிருந்தவர் விடுதலை

(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்த வல்லிபுரம் குமார குலசிங்கம் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் போது அவர் கூறியவை தவறாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளன என்று நீதிமன்றில் தெளிவாக்கப்பட்டதை அடுத்தே அவர் விடுதலை செய்யப்பட்டார்.

மே 24, 1990ற்கும் மே23, 1991க்கும் இடைப்பட்ட காலத்தில் கிராம சேவையாளர் பாலிப்போடி தொடர்பான தகவல்களை விடுதலைப் புலிகளுக்கு வழங்கிவந்தார் என்று இவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது

திருமதி திலகவர்த்தனா முன்நிலையில் அண்மையில் இவ் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது பொலிஸ் விசாரணைகளில் மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றிய டீன் சட்டத்தரணிகளின் குறுக்கு விசாரணையின் போது தமிழிலிருந்து சிங்களத்திற்கு மொழி பெயர்ப்பதில் தமது அநுபவம் போதுமானதல்ல எனத் தெரிவித்தார்.

இதனையடுத்து நீதிபதி சம்பந்தப்பட்ட இளைஞரை விடுவித்தார்.

நிலை திரும்பினால் மாத்திரமே அகதிகள் தமது சொந்த இடங்களுக்கு திரும்ப முடியும். அதுவரை அகதிகளைத்திருப்பி அனுப்ப முயற்சிக்க

வடிக்கை எடுத்து வருவதும், இது தொடர்பாக ஆராய சுவிஸ் அரசின் அதிகாரி ஒருவர் விரைவில் கொழும்பு வர விருப்பதும் தெரிந்ததே.

ஐக்கிய தேசிய கட்சியில்

## றொனியை இணைப்பதற்கு பலத்த ஆட்சேபம்

முன்னாள் நிதி அமைச்சர் றொனித மெல்லை மீண்டும் ஐ.தே.க வுடன் இணைப்பதற்கு அமைச்சரவை கடுமையாக எதிர்ப்பைத் தெரிவித்ததை தொடர்ந்து றொனியை மீண்டும் இணைப்பதற்கானநடவடிக்கை பிசுபிசுத்து போனதாக 'யுத்திய' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவை போல றொனியும் ஓர் சர்வாதிகாரிபோல செயல்பட்டார் என்றும் இதனால் ஐ.தே. கட்சியில் இருந்து பலரும் விலகிச்சென்றதாகவும் அமைச்சர்கள் ஜனாதிபதிக்கு சுட்டி காட்டியதாக மேலும் தெரிவித்துள்ளது.

றொனித மெல் இல்லாது விட்டாலும் நிதி அமைச்சில் பாரிய மாற்றங்கள் எதுவும் நடைபெறவில்லை என்றும் எனவே றொனியை மீண்டும் எடுப்பது கட்சியில் இன்னும் பிளவு வரும் என அமைச்சர்கள் சுட்டிகாட்டியதாக தெரிய வருகின்றது.

### ஆதாரம காட்டிப் பெறவும்

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்திற்கு வருகை தந்த ஒருவர் தொலைத்த சொற்ப பணத்தைக் கண்டெடுத்த வேம்படி மகளிர் கல்லூரி மாணவி செல்வி சி. சோபிதாவும், உரும்பராய் இந்துக் கல்லூரி மாணவி செல்வி க. பாமாவும், அதனைக் கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைத்துள்ளனர். பணத்தைத் தொலைத்தவர் சரியான ஆதாரம் காட்டிப் பணத்தை நேரிற் பெற்றுக் கொள்ளலாம் என கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அனைவரும் வியக்கத்தக்க முறையில் தமிழ் பிரதிநிதிகள் வெற்றி பெற்றனர். ஆளும்ஐக்கிய தேசியக்கட்சிக்கும் வகுப்புவாத எதிர்க்கட்சிகளுக்கும் இந்த வெற்றி தொடர்பாக ஏற்பட்ட எரிச்சலின் வெளிப்பாடே இந்த அடையாள அட்டை நாடகம் வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காணதயக்கம் காட்டும் அரசும், எதிர்க்கட்சிகளும் அடையாள அட்டை விடயத்தில் ஒற்றுமையாக உள்ளனர். மலையக தோட்டத் தொழிலாளர் அரசியலில் பிரவேசித்து தாங்கள் விரும்பியவர்களை தேர்ந்தெடுக்கப்படுவதை தடை செய்யவே இந்த கபட நாடகம் அரங்கேற்றப்படுகிறது எனவும் தெரிவித்தார்.

### உள்ளூர் உற்பத்திகளின் கண்காட்சி

உள்ளூர் உற்பத்திப்பொருள்களுக்கு மக்கள்மத்தியில் உள்ள நம்பிக்கையுணர்வை மேலும் வலுவடையச் செய்யும் நோக்குடன் உள்ளூர்உற்பத்தி முயற்சிகளை உள்ளடக்கிய கண்காட்சி ஒன்று நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் கடந்த 29ஆம் திகதி மாலை 3 00 மணியளவில் தொடங்கி வைக்கப்பட்டது.

இக் கண்காட்சி நிகழ்வினை யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி அவர்கள் நாடாவினைவெட்டி வைபவரீதியாக திறந்து வைத்தார்.

### இலைகஞ்சி தயாரித்து காட்டப்பட்டது

போஷாக்கின்மையால் வாடும் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் போஷாக்கை ஏற்படுத்தும் நிகழ்ச்சியாக இலைக்கஞ்சி தயாரிக்கும் முறை யாழ். மாநகரசபை சுகாதாரப் பகுதியினால் குருநகர் தண்ணீர் தாங்கியில் நேற்று முன் தினம் செய்து காட்டப்பட்டது.

இங்கு உள்ள சனசமுக நிலையங்கள் கடற்றொழில் சங்கங்கள் இதற்கான நிதியையும் உணவு தயாரிப்பதற்குத் தேவையான பொருள்களையும் அன்பளிப்பாக வழங்கி உதவின. (17)

### நாட்டுக்கூத்து அரங்கேற்றம்

பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழக மைதானத்தில் எதிர்வரும் வெள்ளியிரவு சம்பூர்ண அரிச்சந்திரா நாட்டுக்கூத்து அரங்கேற்றம் நடைபெறவுள்ளது. இது பாசையூர் புலவர் ஆ. செகராசசிங்கம் அவர்களின் பத்தாவது படைப்பு என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## சந்தை விலை விபரம் (02-08-1993)

## யாழ். மாவட்ட சராசரி சில்லறை விலைகள்

| தொ. இல. | பொருள்கள் | அலகு | திருநெல்வேலி | பெரிய கடை | சுன்னாகம் | அச்சுவேலி | சங்கானை | நெல்லியடி | பருத்தித்துறை | கொடிகாமம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 01. | குத்தரிசி | கி.கி | 31.00 | 29.00 | 31 00 | 27.00 | 28.50 | 30.00 | 28 00 | 31.00 |
| 02. | கோதுமை மா | '' | 14.00 | 13.50 | 13.50 | 14.50 | 13.00 | 14.00 | 13.00 | 13.50 |
| 03. | சீனி | '' | 29.00 | 31.00 | 32.00 | 32.00 | 30 00 | 34.00 | 37.00 | 36 50 |
| 04. | கத்தரி | '' | 15.00 | 22.50 | 17.50 | 18.00 | 13 00 | 15.50 | 17.00 | 14.50 |
| 05. | வெண்டி | '' | 27.00 | 40.50 | 24.50 | 38.00 | 20.50 | 28.00 | 30.50 | 40.00 |
| 06. | பாகல் | '' | 33.00 | 39.50 | 24.00 | 50·00 | 34.00 | 21.50 | 36.50 | 33.00 |
| 07. | புடோல் | '' | 18.00 | 23.50 | 15.50 | 25.00 | 13 00 | 16.50 | 18.50 | 19 00 |
| 08. | பயற்றங்காய் | '' | 26.00 | 40 00 | 23.50 | 38.50 | 40.00 | 26.00 | 30.50 | 21.00 |
| 09. | தக்காளி | '' | 95.00 | 106.50 | 73.00 | 80.00 | 80.00 | — | — | — |
| 10. | வாழைக்காய் | '' | 44.00 | 48.00 | 40.00 | 48.00 | 50.00 | 48 00 | 46.50 | 58.00 |
| 11. | பீற்றூட் | '' | 30.00 | 41.50 | 27.50 | 30.00 | 25.00 | 25.00 | 32.00 | — |
| 12. | தேங்காய் | ஒன்று | 12.50 | 15.00 | 14.00 | 14.50 | 14.50 | 15.00 | 13.50 | 11.00 |
| 13. | பச்சைமிளகாய் | கி.கி | 125.00 | 128.00 | 113.00 | 173.00 | 116.00 | 103.00 | 103.00 | 103 00 |
| 14. | எலுமிச்சை | '' | 90.00 | 113.00 | 113.00 | 100.00 | 135.00 | 80.00 | 93.00 | 90 00 |
| 15. | வெங்காயம் | '' | 10.00 | 14.50 | 10.00 | 14.50 | 13 00 | 14.50 | 15.00 | 11.00 |
| 16. | கப்பல் வாழைப்பழம் | '' | 45.50 | 46.00 | 50.00 | 50.50 | 45 00 | 55.00 | — | 45.00 |
| 17. | இறால் | '' | 80.00 | 117.00 | 106.50 | 75.00 | 73.00 | 100.00 | 80.00 | 58.00 |
| 18. | பெரிய மீன் | '' | 160.00 | 165.00 | 140.00 | 250.00 | 115 00 | 200 00 | 120.00 | 140 00 |
| 19. | சிறிய மீன் | '' | 100.00 | 75.00 | 50.00 | 100.00 | 80 00 | 80.00 | — | 75.00 |
| 20. | முட்டை | ஒன்று | 07.00 | 09.00 | 08.00 | 08.50 | 08.00 | 07.00 | 08.50 | 06.50 |

தகவல்:- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

## மாவீரர் உருவப்படங்கள் மேலும் வெளிவந்துள்ளன

ஆ. க. வெ. நடவடிக்கையின் போது தற்கொடையாளர்களான பின்வரும் மாவீரர்கள் உருவப்படங்கள் அண்மையில் வெளிவந்துள்ளன.

01. வீ. வே.சிவதாஸ் யுவானிஸ் தெம்சியஸ் — தலைமன்னார்
02. வீ.வே.செந்தூரன் கந்தையா நாகேந்திரன் — அம்பாறை
03. " மனோஜ் கண்டுமணி அருள் — கிளிவெட்டி, மூதூர்
04. தங்கமணி புஸ்பகலா நடராசா — கரவெட்டி கிழக்கு
05. வீ. வே அன்புச்செல்வன் பூபாலப்பிள்ளை புஸ்பநாதன் — அம்பாறை
06. வீ.வே.ஜெயா ஜேசுதாஸ் கொன்றியூட் — மன்னார்
07. வீ.வே.சங்கீதா மேரி காளிமுத்து — வவுனியா
08. வீ வே சந்திரன் முருகேசு ராஜேஸ்கண்ணன் — மட்டு.
09. வீ.வே. கோபிகா/சோபிகா பராசக்தி கந்தசாமி — ஏழாலை மேற்கு
10. வீ வே.முரளி சின்னத்தம்பி மோகன் — மட்டு.
11. வீ.வே பீலிக்ஸ் அருளானந்தம்றொனால்ட் ஆனந்த் — தொட்டுவை, பலாலி
12. வீ வே.வசிதரன் குருகுலசிங்கம் செளந்தரராஜன் — மட்டு.
13. வீ.வே.சங்கன் சுப்பிரமணியம் கருணாநிதி — எழுதுமட்டுவாள்
14. வீ.வே.ஜோன் இராசப்பு விஜபதாஸ் — முல்லைத்தீவு
15. 2-ம் லெப்.விக்கி இரத்தினம் சாந்தவேல் — தொண்டமானாறு
16. 2-ம் லெப்.அலன் கணபதிப்பிள்ளை ரவிச்சந்திரன் — மட்டு.
17. லெப்.பிரசாந்த் கந்தசாமி மனோகரன் — திருமலை
18. லெப். ரகீம் சிவக்கொழுந்து யோகநாதன் — மட்டு.
19. கப்டன் கில் சண்முகம் தபேந்திரன் — மாங்குளம்
20. மேஜர் கோணேஸ் மார்க்கண்டு தாமோதரம்பிள்ளை — புத்தூர் மேற்கு
21. வீ.வே.வேணு கந்தசாமி பிரபா — மட்டு.
22. மேஜர் சிவசங்கர் யோசப் ஜெயமணி — வவுனியா
23. வீ.வே.சுடரோன் நடராசா ஜெகதீஸ்வரன் — காங்கேசன்துறை

1991 ஆம் ஆண்டு ஆ. க. வெ. நடவடிக்கையின்போது ஆனையிறவுபிரதேசத்தில் தம்மைத்தற்கொடையாளர்களாக்கிக் கொண்ட மேல்வரும் மாவீரர்களின் போஸ்ரர் படங்களை சிறு அன்பளிப்புச் செலுத்துவதன் மூலமாக தமிழீழ மாவீரர் பணிமனைகொக்குவிலில் பெற்றுக்கொள்ளலாம் என்று தமிழீழ மாவீரர் பணிமனை அறிவித்துள்ளது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 03-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; 10537

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-0526, 28-9676, 26-3998, 24-4350, 26-9658

# இனப்பிரச்சினை தீர்ந்தாலே பொருளாதார வளர்ச்சி

### அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர்

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு-கிழக்கு பிரச்சினை தொடர்ந்தும் தீர்க்கப்படாமல்இருப்பது நாட்டின் சுபீட்சத்தைப் பாதிப்பதாகும் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பதால் பாதுகாப்புச்செலவினம் அதிகமாக இருப்பதுடன் பாதுகாப்பின்மையால் முன்னேற்றம் தடைப்பட்டுள்ளது. இவ்வாறு அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் திருமதி டெரேசிடா...ஷாபர் இலங்கை வர்த்தக சபையின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய போது தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்; இந் நாட்டின பொருளாதார எதிர்கா..லத்தை பற்றி பேசும் நாம், நாட்டை எதிர்நோக்கியுள்ள மிகப் பாரதூரமான அடிப்படை அரசியல் பிரச்சினை பற்றி பேசாமல் விடக்கூடாது. பிரச்சினைக்கு உட்பட்டிருக்கும் வடக்கு-கிழக்கு பிரதேசத்தின் நீண்டகால சிக்கலை அரசியல் ரீதியாகத் தீர்ப்பதற்கு முன்வர வேண்டும். இலங்கைக்கு அமெரிக்கா 1993 ஆம் ஆண்டில் 73 மில்லியன் யு. எஸ். டொலர்களையும், மேலும் 100 மில்லியன் யு. எஸ். டொலர்களையும் சர்வதேச நிதிநிறுவனங்கள் வாயிலாகவும் வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

## மயிலந்தனை படுகொலை அக்டோபரில் விசாரணை

(பொலநறுவ)

மட்டக்களப்பு மயிலந்தனையில் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக 23 இராணுவத்தினருக்கும் எதிரான விசாரணைகள் அக்டோபர் 11ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை பொலநறுவ நீதிமன்றத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வழக்கு கடந்த வியாழக்கிழமை பொலநறுவ நீதி மன்றத்தில் விசாரணைக்கு வந்தது 23 எதிரிகளும் அங்கு ஆஜராக்கப்பட்டிருந்தனர்.

வழக்கு விசாரணைக்கு அச்சம் காரணமாக செல்லத்தவறிய சாட்சிகளாகிய 10 தமிழ் பொது மக்களும் வாழைச்சேனைப் பொலிசாரினால் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

## பொதுநலவாயக் குழு டி. பியை சந்தித்தது

கொழும்பு வந்துள்ள பொதுநலவாய நாடுகள் பாராளுமன்றக் குழுவினர் நேற்று முன்தினம் ஜனாதிபதி விஜயதுங்காவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது. பேச்சுகளின்போது இரு தரப்பு அக்கறையுள்ள விடயங்கள் குறித்து பேசப்பட்டதாக தெரிவிக்கப்பட்டபோதிலும் பேச்சு குறித்த விபரங்கள் ஏதும் வெளியிடப்படவில்லை.

பொதுநலவாய குழுவினர் இன்று சபை முதல்வர் விஜயபாலமெண்டிசையும் சந்தித்து பேச்சுகள் நடத்தினர்.

# இனப் பிரச்சினைக்கு கல்வித்திட்டமே காரணம்

### உயர்கல்வி அமைச்சர் கருத்து

(கொழும்பு)

சிறிலங்காவின் கல்வி முறை அதனை ஓர் ஒன்றிணைந்த நாடாக இணைக்கத் தவறி விட்டது என்று நீதிமற்றும் உயர்கல்வி அமைச்சர் ஏ. சி. எஸ் ஹமீட் தெரிவித்தார்.

நாரன்பிட்டியா சர்வதேசப் பாடசாலைப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எமது நடைமுறைக் கல்வி முறை பல பிரச்சினைகளைக் கொண்ட கெடுதியான திட்டமாகும். வடக்கு - கிழக்கு மற்றும் தெற்கில் நடந்த பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணம் எமது கல்வியாகும்.

1956-இல் சிங்களம் மட்டும் கொள்கையை அறிமுகப் படுத்தியது எமது இனப் பிரச்சினைக்குக் காரணமாக அமைந்தது. எல்லோருக்கும் வேலை வாய்ப்புகள் இருந்தால் பிரச்சினைகள் தலைதூக்கியிராது. இவ்வாறு அவர் தனது உரையில் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையில் 85சத விகிதத்தினர் கல்வி அறிவுடையவர் என்று கூறப் படுகிறது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இலங்கை கல்வியில் முன்னணியில் உள்ளது. ஆனால் எம்மை விடக் குறைவாக, 50சத விகித கல்வி அறிவு பெற்றுள்ள இந்தியா, பாகிஸ் தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகள் தொழில்நுட்ப வளர்ச்சியில் எம்மை விட முன்னேற்றமான நிலையில் உள்ளன என்றார்.

50 சத வீதமான

பயன்படுத்தப் படுகின்றன. ஆயினும் இவை வினைத்திறனுடன் முறையாகப் பயன்படுத்தப்படுவதில்லை.

இதேவேளை கிராமப்புறங்களில் ஆசிரியர் தட்டுப்பாடு, நகர்ப்புறங்களில் தேவைக்கு அதிகமான ஆசிரியர்கள் இதனால் பிரச்சினைகள் தோன்றுகின்றன என அவ் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பழனி, இராணிப்பேட்டை உட்பட

## தேர்தல்கள் ஒத்திவைப்பு ஜெயலலிதா கண்டனம்

[சென்னை]

காங்கிரஸ் கட்சி தோல்வியுற்று விடலாம் என்ற அச்சத்தின் காரணமாகவே நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெறவிருந்த தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டமைக்கு காரணம் ஆகும் என்று தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் சென்னையில் அவர் வெளியிட்ட அறிக்கையில், மேலும் தமிழ்நாடு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சட்டம் ஒழுங்கு போன்ற சகல நிலைமைகளும் சீராக இருப்பதாகவும். தேர்தல் ஒத்தி வைக்கப் படுவதற்கு காரணம் எதுவும் இல்லை என்றும் கூறியுள்ளார்.

அத்துடன் மத்திய அரசும் தேர்தல் ஆணையகமும், தன்னிச்சையான போக்குடன் செயற்படுவதாகவும், எப்போதாவது ஒரு நாள் தேர்தல் நடத்தப்படத்தான் வேண்டும் என்றும் அப்போது மக்கள் சரியான பாடம் புகட்டுவார்கள் என்றும் ஜெயலலிதா தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தத் தேர்தல் ஒத்திவைப்பு குறித்து தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கருத்து எதையும் கூற மறுத்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## தபால் விநியோகம் சில தினங்களில் முடிவுறும்

[யாழ்ப்பாணம்]

கொழும்பிலிருந்து கப்பலில் ஏற்றிவரப்பட்ட தபால்களை விநியோகிக்கும் வேலையில் யாழ். பிரதம தபாலகம் ஈடுபட்டுள்ளது.

தற்போது பாதிக்கும் அதிகமான பைகள் பிரிக்கப்பட்டு தபால் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக தபாலக வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இன்னமும் சில தினங்களுக்குள் அனைத்துத் தபால்களும் விநியோகம் செய்யப்பட்டு விடும் என்று தெரிவிக்கப்பட்டன.

வெளிநாட்டுப் பதிவுத் தபால்கள் இம்முறை குறைவாகவே வந்து சேர்ந்துள்ளபோதிலும் அவையாவும் அநேகமாக கடற்படையால் பிரிக்கப்பட்டே உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(தி), (பா)

## கருத்தரங்கு

இன்று பிற்பகல் 3-00 மணிக்கு யாழ். பல்கலைக் கழகத்தின் புவியியற்றுறை விரிவுரை மண்டபத்தில் கலாநிதி எஸ். கிருஷ்ணராஜா (தலைவர், மெய்யியல் துறை) தலைமையில் யாழ்ப்பாண விஞ்ஞான சங்க சமூக விஞ்ஞான பிரிவினரின் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் சமூக விஞ்ஞான பிரிவின் நடப்பாண்டு தலைவரும், புவியியல் துறை தலைவருமான பேராசிரியர் செ. பாலச்சந்திரன் அவர்கள் படிவு வீழ்ச்சி செறிவுக் குறிகாட்டி - இலங்கைக்கான ஒரு பிரயோகம் என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் கருத்துரை வழங்குவார்.

## விளையாட்டுப் போட்டி

(தொல்புரம்)

தொல்புரம் விக்னேஸ்வரா சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா அவர்கள் கலந்து கொள்வார். (41)

## லெப். தில்லைச்செல்விக்கு மக்கள் இறுதி அஞ்சலி

(தொல்புரம்)

எழுதுமட்டுவாள் பகுதியில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தொன்றில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட பொன்னாலை மேற்கைச் சேர்ந்த லெப்டினன்ட் தில்லைச்செல்வி / சத்தியா, (பிரேமானந்தி நித்தியானந்தம்) ஆகிய வீரவேங்கையின் புகழுடல் நேற்றுக் காலை 10. 00 மணியளவில் தொல்புரம் அமெரிக்க மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு

## தாண்டிக் குளத்தில்

பாலமோட்டை ஓமந்தையைச்சேர்ந்த கந்தையா பாலசிங்கம் என்பவர் கடந்த 31

காங்கேசன்துறை

1991 ஆம் ஆண்டு ஆ. க. வெ. நடவடிக்கையின்போது ஆனையிறவுபிரதேசத்தில் தம்மைத்தற்கொடையாளர்களாக்கிக் கொண்ட மேல்வரும் மாவீரர்களின் போஸ்ரர் படங்களை சிறு அன்பளிப்புச் செலுத்துவதன் மூலமாக தமிழீழ மாவீரர் பணிமனைகொக்குவிலில் பெற்றுக்கொள்ளலாம் என்று தமிழீழ மாவீரர் பணிமனை அறிவித்துள்ளது.


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 03-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; 10537

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-0526, 28-9676, 26-3998, 24-4350, 26-9658
27-3927, 42-3368, 26 8113, 26-5162, 43-4170
41-9355, 22-4766, 24-5623, 24-5721, 26-5576.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

41-1531, 26-5112, 24-5087, 27-0922, 41-8449
24-3262, 40-7299, 26-6745, 28-9537.

## யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

(கரும்புலிகள் நினைவாக)

போராளிக் கலைஞர்கள் ஒருங்கிணைந்து
விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகம்
தயாரித்து வழங்கும்

## "தாயக கனவு"

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மணி,
மாலை 4.00 மணி, 6.00 மணி (சி6959)

மாரீசன்கூடல்
புனித கயித்தார் வருடாந்த

## திருவிழா திருப்பலி

மாரீசன்கூடல் புனித கயித்தார் வருடாந்த திருவிழா திருப்பலி இம்முறை மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் எதிர்வரும் 7ஆம் திகதி (07-08-93) சனிக்கிழமை காலை 7 மணிக்கு பங்குத் தந்தை அவர்களால் ஒப்புக் கொடுக்கப்படும். அத்தருணம் புனித கயித்தார் பக்தர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்

(5614)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில 1993-ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் 04-ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


# உயர்கல்வி அமைச்சர் கருத்து

(கொழும்பு)

சிறிலங்காவின் கல்வி முறை அதனை ஓர் ஒன்றிணைந்த நாடாக இணைக்கத் தவறி விட்டது என்று நீதிமற்றும் உயர்கல்வி அமைச்சர் ஏ சி. எஸ் ஹமீட் தெரிவித்தார்.

நாரன்பிட்டியா சர்வதேசப் பாடசாலைப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எமது நடைமுறைக் கல்வி முறை பல பிரச்சினைகளைக் கொண்ட கெடுதியான திட்டமாகும். வடக்கு - கிழக்கு மற்றும் தெற்கில் நடந்த பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணம் எமது கல்வியாகும்.

1956-இல் சிங்களம் மட்டும் கொள்கையை அறிமுகப் படுத்தியது எமது இனப் பிரச்சினைக்குக் காரணமாக அமைந்தது. எல்லோருக்கும் வேலை வாய்ப்புகள் இருந்தால் பிரச்சினைகள் தலைதூக்கியிராது. இவ்வாறு அவர் தனது உரையில் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையில் 85சத விகிதத்தினர் கல்வி அறிவுடையவர் என்று கூறப் படுகிறது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இலங்கை கல்வியில் முன்னணியில் உள்ளது. ஆனால் எம்மை விடக் குறைவாக, 50சத விகித கல்வி அறிவு பெற்றுள்ள இந்தியா, பாகிஸ் தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகள் தொழில்நுட்ப வளர்ச்சியில் எம்மை விட முன்னேற்றமான நிலையில் உள்ளன என்றார்.

### 50 சத வீதமான

பயன்படுத்தப் படுகின்றன. ஆயினும் இவை வினைத்திறனுடன் முறையாகப் பயன்படுத்தப்படுவதில்லை.

இதேவேளை கிராமப்புறங்களில் ஆசிரியர் தட்டுப்பாடு, நகர்ப்புறங்களில் தேவைக்கு அதிகமான ஆசிரியர்கள் இதனால் பிரச்சினைகள் தோன்றுகின்றன என அவ் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## வேலணை பலநோக்குக்கூட்டுறவுச்சங்கம்

295/35 கே. கே. எஸ். வீதி, (வரையுள்ளது)
கோணாந்தோட்ட ஒழுங்கை யாழ்ப்பாணம்.

## முக்கிய அறிவித்தல்

## கிளைக்குழுத் தேர்தல் - 1993

மேற்படி சங்கத்தின் கிளைக்குழுத் தெரிவுக்கான நியமிப்புப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளும் திகதி 15 08. 93 ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9 00 - மு ப. 10. 00 மணி வரை. அபேட்சகர்கள் நியமிப்புக்கு ஆட்சேபனைகள் ஏதேனும் இருப்பின் அன்றைய தினம் மு.ப. 10. 00 மணிமுதல் 11 00 மணிவரை தேர்தல் உத்தியோகத்தரால் எழுத்து மூலமான ஆட்சேபனைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேர்தல் திகதி 22 08 93 ஞாயிற்றுக்கிழமை மு ப. 9 00 - பி. ப. 4 00 மணி வரை நடைபெறும். பின்வரும் கிளைகளுக்கான நியமிப்புப் பத்திரங்கள் பின்வரும் இடங்களில் ஏற்றுக்கொள்ளப்படும்.

| கிளைஇல. | கிளையின் பெயர் | ஏற்றுக்கொள்ளப்படும் இடம் |
|---|---|---|
| 01 | மண்டைதீவு | இல. 135, மானிப்பாய்வீதி, யாழ்ப்பாணம். கிளை விற்பனை நிலையம். |
| 02 | மண்டைதீவு | ,, ,, |
| 03 | அல்லைப்பிட்டி | இல. 128, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். கிளை விற்பனை நிலையம். |
| 14 | சரவணை | ,, ,, |
| 07 | வேலணை தெற்கு | கே.கே.எஸ் வீதி, கோணாந் தோட்ட ஒழுங்கை யாழ்ப்பாணம், சங்க தலைமையலுவலகம். |
| 08 | சந்திரா | ,, ,, |
| 09 | சிற்பனை | ,, ,, |
| 10 | வங்களாவடி | மானிப்பாய் வீதி, கோணாந்தோட்டம் யாழ்ப்பாணம். கிளைவிற்பனை நிலையம். |
| 11 | வேலணை மத்தி | ,, ,, |
| 12 | கோளாவத்தை | ,, ,, |
| 13 | பள்ளம்புலம் | ,, ,, |
| 16 | அம்பிகை நகர் | ,, ,, |
| 06 | தேவிகோட்டம் | இல. 51, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். கிளை விற்பனை நிலையம். |
| 15 | கேணிக்கரை | ,, ,, |
| 04 | மண்கும்பான் | மானிப்பாய் வீதி, கோணாந் தோட்டம் யாழ்ப்பாணம். கிளை விற்பனை நிலையம் |
| 05 | ஆலம்புலம் | ,, ,, |

கூட்டுறவு அலுவலகம்,
யாழ்ப்பாணம். (சி-7124)

பொ. கணேசலிங்கம்
தேர்தல் உத்தியோகத்தர்


பாண்டு தலைவரும், புவியியல் துறை தலைவருமான பேராசிரியர் செ. பாலச்சந்திரன் அவர்கள் படிவு வீழ்ச்சி செறிவுக் குறிகாட்டி - இலங்கைக்கான ஒரு பிரயோகம் என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் கருத்துரை வழங்குவார்.

வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா அவர்கள் கலந்து கொள்வார். (41)

# லெப். தில்லைச்செல்விக்கு மக்கள் இறுதி அஞ்சலி

(தொல்புரம்)

எழுதுமட்டுவாள் பகுதியில் தவறுதலாக ஏற்பட்ட வெடி விபத்தொன்றில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட பொன்னாலை மேற்கைச்சேர்ந்த லெப்டினன்ட் தில்லைச் செல்வி / சத்தியா, (பிரேமானந்தி நித்தியானந்தம்) ஆகிய வீரவேங்கையின் புகழுடல் நேற்றுக் காலை 10. 00 மணியளவில் தொல்புரம் அமெரிக்க மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பெரும் திரளான மக்கள் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். பின்னர் சுமார் 11. 00 மணியளவில் பாண்ட் வாத்திய சகிதம் ஊர்வலமாக மாவீரர் துயிலும் இல்லத்திற்கு புகழுடல் எடுத்துச் செல்லப்பட்டது. (41)

### தாண்டிக் குளத்தில்

பாலமோட்டை ஓமந்தையைச்சேர்ந்த கந்தையா பாலசிங்கம் என்பவர் கடந்த 31 ஆம்திகதி தடைசெய்யப்பட்ட பொருள்களுடன் வந்ததாகக் கூறி தாண்டிக்குளத்தில் தடுக்கப்பட்டிருந்தார். பின்னர் நேற்று இவர் விடுவிக்கப்பட்டார்.

### தப்பி

பாதுகாப்பு வட்டாரங்கள் வலியுறுத்தி வருகின்றன.

வடக்கு-கிழக்கு இராணுவ முகாம்கள்மீது புலிகள் தாக்குதல் நடாத்தக்கூடும் என இராணுவ உயர்பீடம் எச்சரிக்கை செய்திருந்தும் இவ்வாறு இராணுவ முகாமை பறிகொடுக்க நேர்ந்தது ஏன் என அவ் வட்டாரங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

மேலும் விடுதலைப் புலிகள் மண்கிண்டிமலை ராணுவமுகாமைச் சூழவுள்ள முகாம்கள் மீதும் தாக்குதல் நடாத்தியுள்ளனர். இந் நிலையில் அம் முகாம்களின் பொறுப்பதிகாரிகளும் விசாரணைக்கு உட்படுத்தப்பட இருப்பதாகவும் அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

### குண்டுவீச்சு

புக்களை நோக்கி எறிகணை வீச்சினை மேற்கொண்டனர். இவ்வெறிகணைகள் மக்கள் குடியிருப்புக்களை அண்மித்த வயல் பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததினால் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரியவருகிறது. (41)

### வீரச்சாவு

கடந்த 31-ம் திகதி மாலை 3. 30 மணியளவில் நடைபெற்ற இத் தாக்குதலின் போது 2-ம் லெப்டினன்ட் கவிவாணன்/ஜோன் (கணேசன் ரவிக்குமார்-கிரான் மட்டக்களப்பு, வீரச்சாவடைந்தார். வீரச்சாவடைந்த இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# கடற்படை நடமாட்டம்

(வடமராட்சி கிழக்கு)

வெற்றிலைக்கேணி கடற் பிரதேசத்தில் சிறிலங்கா கடற்படையின் பாரிய கப்பல் ஒன்று நங்கூரமிட்டுள்ளது.

இப்பகுதியில் கடற்படை விசைப்படகுகளின் நடமாட்டமும் அதிகரித்துக் காணப்படுகின்றது. (36)

### உண்ணாவிரதம்

யாகிவிட்டனர். சிலர் காய்ச்சல் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### நடவடிக்கை

மூலம் கொழும்பிலுள்ள யுத்தக் கைதிகளின் உறவினரால் நேற்று யுத்தக்கைதிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் உண்ணாவிரதத்தை உடனடியாகக் கைவிடுமாறு அவ் உறவினர்கள் உண்ணாவிரதிகளைக் கேட்டுள்ளனர்.

யுத்த நடவடிக்கைகளுக்கு திட்டமிட்டுக் கொண்டிருப்பதால் எவரும் விடுவிப்பு தொடர்பாக கதைக்க முன்வரவில்லை என அவ் உறவினர்கள் குறிப்பிட்டுள்ளதாக தெரியவருகிறது.

### அநுரா

யம் பேணப்படவேண்டும் என இரு கோரிக்கைகள் முன்வைக்கப்பட இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.